**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8081683

1. District மாவட்டம் : Dharmapuri    PS: காவல்நிலையம் : V & AC    Year: ஆண்டு : 2024    FIR No.: மு.த.அ. எண் : 03/AC/2024    Date: நாள் : 12.04.2024

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption    Sections பிரிவுகள்: 7(a)
   (ii) Act சட்டம்: Act, 1988 as amended in    Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: 2018    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் : 27.03.2024 at 11.15 hrs    Date to : நாள் வரை : 03.04.2024 at 11.00 hrs
   08.04.2024 at 11.15 hrs &
   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்    Time to : நேரம் வரை : 11.04.2024 at 18.45 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்    Time : நேரம் : 12.04.2024 at 06.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : O/o The Village Administrative Officer, H-Agraharam Village, Harur Taluk, Dharmapuri District. About 34 kms east.
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம் : —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : S. Sathish Kumar    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : Tr. Sekar
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 32/2024    (d) Nationality : நாட்டினம் : Indian    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் : —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் : —    Place of Issue : வழங்கப்பட்ட இடம் : —
   (f) Occupation தொழில் : System Architect, Tech Mahindra Software Company, Chennai.    (g) Address : முகவரி : No. 3/87 A, Attiyanoor Village, H. Agraharam (PO), Harur (TK), Dharmapuri (DT).

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) Tr. Venkatesan, Village Administrative Officer, H-Agraharam Village, Harur Taluk, Dharmapuri District.
   2) Tr. Vasu, Village Assistant, O/o the Village Administrative Officer, H-Agraharam, Harur Taluk, Dharmapuri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் : —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 12/04/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

12-04-2024 at 09.20 hrs

Name: பெயர் G. PERUMAL
Rank: நிலை INSPECTOR OF POLICE, VAC, DHARMAPURI

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.3/AC/2024, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12–ன் தொடர்ச்சி.

******

இன்று 12.04.2024-ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 06.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், H.அக்ராகரம் அஞ்சல், ஆட்டியானூர் கிராமம், கதவு எண்.3/87A என்ற முகவரியைச் சேர்ந்த சேகர் மகன் S.சதீஷ்குமார் என்பவர் அலுவலகம் வந்து எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு.

நான் தருமபுரி மாவட்டம், ஆட்டியானூர் கிராமத்தில் குடும்பத்துடன் குடியிருந்து கொண்டு, சென்னையில் உள்ள Tech Mahindra Software கம்பெனியில் System Architect-ஆக வேலை செய்து வருகிறேன். நான் M.E., கம்ப்யூட்டர் சயின்ஸ் படித்துள்ளேன். எனக்கு சொந்தமாக H.தாதம்பட்டி வருவாய் கிராமத்தில் பட்டா எண்.336, சர்வே எண்.50/7A7-ல் சுமார் 45 சென்ட் விவசாய நிலம் உள்ளது. அந்த நிலத்தில் 3¼ சென்ட் நிலத்தை, எங்க ஊரைச் சேர்ந்த ராஜி மகன் திரு.கோபால் என்பவருக்கு 12.11.2021 அன்று வழி பாதைக்காக கிரயம் செய்து கொடுத்தேன். அதனால் திரு.கோபால் அவர்களின் பெயர், எனது பட்டாவில் கூட்டாக சேர்க்கப்பட்டது. எனவே எனக்கு சொந்தமான நிலத்தை சப்–டிவிசன் செய்து, எனது பெயரில் தனிப்பட்டா பெற முடிவு செய்து, நான் சொன்னதின்பேரில், எனது தம்பி சக்திவேல் H.அக்ராகரம் VAO திரு.வெங்கடேசன் அவர்களை சந்தித்து, அவரது அறிவுறுத்தலின்பேரில் 05.03.2024 அன்று எனது பெயரில் சப்–டிவிசன் செய்து பட்டா மாற்றம் செய்ய ஆன்லைனில் விண்ணப்பித்தார். பிறகு நான் விடுப்பில் வந்து, 11.03.2024 அன்று காலை சுமார் 11.30 மணிக்கு H.அக்ராகரம் VAO அலுவலகம் சென்றேன். அங்கு VAO திரு.வெங்கடேசன் அவர்கள் இல்லாததால், அங்கிருந்த கிராம உதவியாளர் திரு.வாசு அவர்களை பார்த்து VAO பற்றி கேட்டேன். அதற்கு அவர் VAO H.அக்ராகரத்தில் சர்வே செய்துக் கொண்டிருப்பதாக சொல்லி, என்னை அங்கு அழைத்து சென்றார். அங்கு VAO திரு.வெங்கடேசன் அவர்களை சந்தித்து, எனது நிலத்தை சப்–டிவிசன் செய்து, தனிபட்டா வழங்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டேன். அதற்கு VAO திரு.வெங்கடேசன் அவர்கள், என்னிடம் எனது நிலம் தொடர்பான ஆவணங்களை கொடுக்குமாறு கேட்டார். அப்போது நான் வைத்திருந்த எனது நிலத்தின் EC, கம்ப்யூட்டர் பட்டா, பத்திர நகல் மற்றும் சப்–டிவிசன் பட்டா மாற்றம் செய்ய விண்ணப்பம் செய்த ஒப்புதல் நகல் ஆகியவற்றை கொடுத்தேன். அவர், அவற்றை வாங்கி பார்த்துவிட்டு, சப்–டிவிசன் செய்து, தனிபட்டா வழங்க செலவாகும் என்றும், எனது கிராம உதவியாளர் திரு.வாசு

உன்னை தொடர்பு கொண்டு தகவல் தெரிவிப்பார் என்று சொல்லி என்னை அனுப்பிவிட்டார். அதன்பிறகு இரண்டு வாரம் ஆகியும், என்னை யாரும் தொடர்பு கொள்ளாததால், நான் 27.03.2024 அன்று காலை சுமார் 10.45 மணிக்கு எனது செல் போன் எண்.9360107703–லிருந்து கிராம உதவியாளர் வாசு அவர்களின் செல்போன் எண்.9790589866–க்கு போன் செய்து எனது பட்டா மாற்றம் குறித்து கேட்டேன். அதற்கு அவர், VAO திரு.வெங்கடேசன் அவர்களை நேரில் வந்து பார்க்குமாறு சொன்னார். அதன்படி, அன்று பகல் சுமார் 11.15 மணிக்கு VAO திரு.வெங்கடேசன் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து, எனது பட்டா மாற்றம் குறித்து கேட்டேன். அதற்கு அவர், ரூ.10,000/– கொடுத்தால் தான் உனது நிலத்தை அளந்து சப்–டிவிசன் செய்து தனிபட்டா வழங்க ஏற்பாடு செய்யமுடியும் என்று என்னிடம் சொன்னார். அதற்கு நான், அவ்வளவு பணம் ரெடி பண்ண முடியாது என்று சொன்னேன். அதற்கு அவர், சர்வே செய்வதற்கு எல்லோருக்கும் பணம் கொடுக்க வேண்டியுள்ளது, பணத்தை ரெடி செய்யுமாறு சொல்லி என்னை அனுப்பிவிட்டார். அதன்பிறகு, நான் 03.04.2024 அன்று காலை சுமார் 11.00 மணிக்கு மீண்டும் VAO திரு.வெங்கடேசன் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து, எனது பட்டா மாற்றம் குறித்து கேட்டேன். அதற்கு அவர், பணம் ரெடி பண்ணிட்டியா என்று கேட்டார். அதற்கு நான், சார் கொஞ்சம் குறைத்து சொல்லுங்க சார் என்று கேட்டேன். அதற்கு அவர், சரி உனக்காக ரூ.2,000/– குறைச்சிக்கிறேன், ரூ.8,000/– மட்டும் கொடுத்துவிடு, நான் சர்வேயரிடம் பேசி ஓரிரு நாளில் உனது நிலத்தை அளக்க ஏற்பாடு செய்கிறேன் என்றும், இல்லையென்றால் உனது வேலையாகாது என்றும் முடிவாக சொல்லி என்னை அனுப்பிவிட்டார். அதன்பிறகு 08.04.2024 அன்று காலை 11.15 மணிக்கு கிராம உதவியாளர் திரு.வாசு, அவரது செல்போன் எண்.9790589866–லிருந்து எனது செல்போன் எண்.9360107703–க்கு போன் செய்து VAO திரு.வெங்கடேசன் கேட்ட பணம் ரூ.8,000/–ஐ எடுத்துக் கொண்டு அரூர் வருமாறு சொன்னார். அப்போது நான் கோவிலில் இருக்கிறேன், நான் வீட்டிற்கு சென்று எனது அம்மாவை மருத்துவ மனைக்கு அழைத்து செல்ல வேண்டும் என்று சொன்னேன். அதற்கு அவர் இன்னைக்கு உனது நிலத்தை சர்வே செய்து விடலாம் என்று நினைத்தோம், சரி VAO-விடம் கேட்டு சொல்வதாக சொல்லி போனை வைத்துவிட்டார். பிறகு கிராம உதவியாளர் திரு.வாசு எனக்கு போன் செய்யாததால், நான் அவரது செல்போன் எண்ணுக்கு அன்று மதியம் சுமார் 12.15 மணிக்கு தொடர்பு கொண்டு கேட்டபோது அவர், VAO வெங்கடேசன் அவர்களிடம் பேசியதாகவும், 10.04.2024 அன்று உனது நிலத்தை அளந்துவிடுவதாக சொன்னதாகவும் என்னிடம் சொன்னார். பிறகு அன்று மாலை 05.00

மணிக்கு VAO திரு.வெங்கடேசன் அவரது செல்போன் எண்.9655562217–லிருந்து எனது செல்போன் எண்.9360107703–க்கு போன் செய்தார். நான் போனை எடுக்காததால், உடனே VAO திரு.வெங்கடேசன் அவர்களுக்கு போன் செய்தேன். அப்போது VAO திரு.வெங்கடேசன் அவர்கள் 10.04.2024 அன்று உனது நிலத்தை அளந்து பின்னர் பட்டா மாற்றம் செய்து விடலாம் என்று சொன்னார். பின்னர் 09.04.2024 அன்று இரவு சுமார் 07.30 மணிக்கு VAO வெங்கடேசன் அவர்கள் எனக்கு போன் செய்து தனக்கு வேலை இருப்பதாகவும், 12.04.2024 அன்று உனது நிலத்தை அளந்து விடலாம் என்று சொன்னார். பின்னர், மீண்டும் நேற்று 11.04.2024 அன்று மாலை சுமார் 06.45 மணிக்கு VAO திரு.வெங்கடேசன் அவர்கள் எனக்கு போன் செய்து, நாளை காலை 10.30 மணிக்கு உனது நிலத்தை அளந்து விடலாம் என்றும், அதற்கு முன்னர் தான் கேட்ட பணம் ரூ.8,000/–த்துடன் தனது அலுவலகம் வந்து தான் சொல்லும்விதம் கொடுக்குமாறும் சொன்னார். ஆனால் அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.8,000/–த்தை கொடுத்து எனது வேலையை முடிக்க எனக்கு விருப்பமில்லை. அதனால், இன்று 12.04.2024 வெள்ளிக்கிழமை H.அக்ராகரம் VAO திரு.வெங்கடேசன் மற்றும் அவரது உதவியாளர் திரு.வாசு ஆகியோர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.8,000/–த்துடன் அவர்களை சந்திக்க தயாராக உள்ளேன். அதனால் H.அக்ராகரம் VAO திரு.வெங்கடேசன் மற்றும் அவரது உதவியாளர் திரு.வாசு ஆகியோர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் Sathishkumar, 12.04.2024. Sir, Received the typed written report on 12.04.2024 at 06.00hrs and further, a confidential verification on the general reputation of the accused persons and whether the informant has motive with them personally, was verified and found that the reputations of accused persons are learnt to be not good and nothing adverse against the informant and the information given in his report is genuine. Therefore, a case in Dharmapuri V&AC, Cr.No.03/AC/2024, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered today 12.04.2024 at 06.30hrs against the accused persons. The original FIR and the typed written report of the informant are sent to the Hon'ble Court of Special Judge cum Chief Judicial Magistrate, Dharmapuri and remaining copies are sent to the officers concerned.

12/04/2024

(G.PERUMAL)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dharmapuri.